**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 325/ஆ5/2026, நாள். 10.02.2026**

•••••

பொருள் பள்ளிக் கல்வி –ஆசிரியர் கல்வி –இராணிபேட்டைமாவட்டம் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் – போதைப்பொருள்எதிர்ப்பு/நன்னெறி கல்வி சார்ந்து உருவாக்குதல் மாவட்ட அளவிலான பயிற்சிக்கு அரசு/அரசு உதவி பெறும்/தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியிலிருந்து இரண்டு பட்டதாரி/முதுநிலை ஆசிரியர்களை பணிவிடுப்பு செய்யக்கோருதல் – தொடர்பாக

பார்வை

1. சென்னை 6,மாநிலகல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.6140/எப்3/2025, நாள்:02.02.2026
2. முதல்வர்,மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிபேட்டை அவர்களின் கடித ந.க.எண்.34/அ2/2026, நாள்.09.02.2026

•••••

பார்வை (1)ல் காணும் செயல்முறைகளுக்கிணங்க இராணிப்பேட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சிநிறுவனம் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/அரசு உதவி பெறும்/தனியார் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி/முதுநிலை ஆசிரியர்களுக்கு போதைப்பொருள் எதிர்ப்பு/ நன்னெறி கல்வி மன்ற செயல்பாடுகள் சார்ந்த ஒரு நாள் பயிற்சி அட்டவணையில் உள்ளவாறு நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் **ஒரு பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள்** வீதம் கலந்து கொள்ள ஏதுவாக பணிவிடுவிப்பு செய்து உரிய நாள்களில் அனுப்ப அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/தனியார் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் **இணைப்பில் உள்ள Google link –யை உடனடியாக பூர்த்தி செய்யவும்** தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு: 1.பள்ளி ADC ஒருங்கிணைப்பாளர்(இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்),
2.நன்னெறிக் கல்விக்கு ஒரு ஆசிரியர்,
3.பயிற்சியின்போது மத்திய உணவு வழங்கப்படும்,
4.இணைப்பில் உள்ள Google link –யை பூர்த்தி செய்யவும்.
5. செய்முறைத் தேர்வுகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு ஆசிரியர்களை தேர்வு செய்து அனுப்பவும்.

அட்டவணை:

| பயிற்சி நடைபெறும் இடம் | பயிற்சி நடைபெறும் நாள் | கலந்துகொள்ள வேண்டிய ஒன்றியங்கள் |
|---|---|---|
| சிக்ஸ்ஷகேந்திரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பள்ளிகொண்டா | 11.02.2026 | ANAICUT, GUDIYATHAM, PERNAMBUT |
| தி தக்ஷிலா குளோபல் பள்ளி வேலூர் | 12.02.2026 | KATPADI, VELLORE(URBAN), VELLORE(RURAL) |
| தி தக்ஷிலா குளோபல் பள்ளி வேலூர் | 13.02.2026 | KANIYAMBADI, K.V.KUPPAM |

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
(அனைத்து அரசு/அரசு உதவி பெறும்/தனியார் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகள்)
நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை/தனியார் கல்வி)
   வேலூர் மாவட்டம்.